விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 11 திங்கட்கிழமை (25.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 188

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## ஜனாதிபதி பயணித்த விமானத்தில் தமிழர்களை ஏற்றுவதற்கு மறுப்பு

### மகேஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜெனீவாவிலிருந்து கொழும்புக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திரும்பிய விமானத்தில் தமிழர்களை ஏற்றுவதற்கு சிறிலங்கா ஏயர்லைன்ஸ் மறுத்துவிட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியதாவது, ஜெனீவாவிலிருந்து கடந்த 17 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ இலங்கை திரும்பினார். எனது பயணச் சீட்டு உறுதிசெய்யப்படாததால் அந்த விமானத்தில் நான் பயணிக்கவில்லை. அதன் (06 ஆம் பக்கம் பார்க்க)

## கொலையாளிகளைக் கண்டுபிடிக்க இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது

### ஐக்கிய நாடுகள் சபை விசனம்

(கொழும்பு)

சூடான், லெபனான் மற்றும் மத்திய ஆபிரிக்கக் குடியரசு நாடுகளைப் போல் இலங்கையிலும் மனிதாபிமானப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கொலையாளிகளைக் கண்டுபிடிக்கவும் இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது என்று ஐக்கிய நாடுகள் சபை விசனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் ஜோன் ஹொல்மெஸ் கடந்த வெள்ளிக்கிழமை இதனைத் தெரிவித்துள்ளார். (06 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாட்டைக் கண்காணிக்கக் கூடிய ராடரை வவுனியாவில் பொருத்துவதற்கு நடவடிக்கை

## சோதனையின்போது 72 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பையும் அதனை அண்டிய பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது சந்தேகத்தின் பேரில் 72 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளவத்தை, (06 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையும் சீனாவும் கூட்டுச் சதி

(கொழும்பு)

தமிழ் நாட்டைக் கண்காணிக்கக் கூடிய ஜே.வை-11 என்ற முப்பரிமாண ராடரை வவுனியாவில் பொருத்துவதற்கு இலங்கை விமானப் படை தீர்மானித்துள்ளது. இவ் ராடர் கருவிகளை சீனா இலங்கைக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன்மூலம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இந்திய ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். *(06 ஆம் பக்கம் பார்க்க)*

## லண்டன் பொலிஸாரால் 5 தமிழ் இளைஞர் கைது

(லண்டன்)

லண்டன் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது இலங்கையைச் சேர்ந்த ஐந்து தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் (06 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.கூட்டத்தில் மகிந்த பங்கேற்பு

அமெரிக்காவின் வாஷிங்டனில் செப்ரெம்பர் மாதம் நடைபெற்றவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் ஆண்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கக் கூடும் எனத் தெரிகின்றது.

ஜனாதிபதிக்குப் பதிலாகப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பங்கேற்கக் கூடும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டதாகவும் தற்போது ஜனாதிபதி பங்கேற்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அலரி மாளிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## முன்னாள் அமைச்சர் மங்களவுடன் இணைந்து எதிர்க்கட்சி அமைப்பதற்கு ஜே.வி.பி. திட்டம்

### தலைவராக மங்களவையே நியமிக்க யோசனை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில்

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டதையடுத்து முன்னாள் அமைச்சர் மங் கள சமரவீரவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க முயற்சிகள் இடம்பெற்று வருவதா கக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் விரிவான முன்னணி ஒன்றை அமைக்க ஜே.வி.பி.சாதகமான பதிலை வழங்காத பட்சத்தில் இவ்வாறான நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்று அந்த வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 42 பேரில் மூன்று பேர் அர சாங்கத்துடன் இணையவுள்ளதாகவும் அதே போன்று அரச தரப்பிலுள்ள சிறிலங்கா சுதந் திரக் கட்சி (06 ஆம் பக்கம் பார்க்க)

டுள்ளதாகவும் அலரி மாளிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச சமூகத்திலிருந்து தனிமைப் படுத்தப்பட்டுள்ள நிலையில் சர்வதேசத்தின் கரி சினையைப் பெறுவதற்காக ஜனாதிபதி மகிந்த நேரில் செல்வதாகவும் கூறப்படுகின்றது. (ச–5)

# அம்பாறையில் சினைப்பர் தாக்குதல் அதிரடிப் படையினர் இருவர் பலி

## விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

அம்பாறை றூபஸ் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்தி சினைப்பர் தாக் குதலில் சிறப்பு அதிரடிப் படையினர் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

றூபஸ் பகுதி சிறப்பு அதிரடிப் படை அரண் மீது நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகள் சினைப்பர் தாக்குதலை நடத்தியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் அதிரடிப் படையைச் சேர்ந்த இரு வர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து அந்த அரண் மீது விடுதலைப்புலிகள் ஆர். பி.ஜி. தாக்குதலை நடத்தியுள்ளதாக விடுத லைப்புலிகள் செய்தி வெளியிட்டுள்ளனர்.(ச–5)

# வவுனியாத் தாக்குதலில் 13 விடுதலைப்புலிகள் பலி

## இராணுவம் தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா ஓமந்தைக்கு மேற்கேயுள்ள இராணுவத்தின் முன்னரங்கப் பகுதிகளைத் தாக்கி ஊடுருவ முயன்ற விடுதலைப்புலிக ளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் சனிக்கிழமை இடம்பெற்ற மோதல்களில் 13 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.

பெரும் எண்ணிக்கையான விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இந்த முயற்சி இரா ணுவத்தின் எதிர்த் தாக்குதலினால் முறியடிக் கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இந்தத் (06 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...
தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரி வினாத் தாள் ஒவ்வொரு திங்கட்கிழமை யிலும் தொடர்ந்து வெளி வரும்.

# தமிழர்களின் முக்கிய பிரச்சினைகளுக்கு இணைத்தலைமை பதிலளிக்க வேண்டும்

## அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைக ளுக்கு ஒஸ்லோவில் கூடும் இணைத் தலை மை நாடுகள் பதிலளிக்க வேண்டும் என்று அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு வலியு றுத்தியுள்ளது.

இது தொடர்பாகத் தமிழர் கூட்டமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இணைத் தலைமைகளில் அங்கம் வகிக் கும் நாடுகள் சிலவற்றின் நடவடிக்கைக ளும்–நடவடிக்கையற்ற தன்மைகளும் சிங் கள கடும்போக்குத் தன்மையை ஊக்கப் படுத்தியுள்ளமை புலத்தமிழ் சமூகத்தில் தீவிர தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் புலத்தமிழ் செயற்பாட்டாளர்க ளுக்கு எதிராக உலகளாவிய ரீதியில் ஒருங் கிணைக்கப்பட்ட– (06 ஆம் பக்கம் பார்க்க)

# சதாம் ஹுசைனின் மைத்துனருக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பு

சதாம் ஹுசைனின் மனைவி வழி உறவினர் கெமிக்கல் அலிக்கு தூக்கு தண்டனை விதித்து ஈராக் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கடந்த 1980 முதல் 1988 ஆண்டு வரை எட்டு ஆண்டுகள் ஈரான்– ஈராக் போரில் எல்லைப்புற குர்தீஷ் இனமக்கள் ஈரானுக்கு ஆதரவாக இருப்பதாக குற்றஞ்சாட்டி போரின் கடைசி நேரத்தில் அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலுக்கு உத்தரவிட்டவர் அலி ஹசன் அல் மஜித் என்ற கெமிக்கல் அலி. இந்த தாக்குதலின் போது விஷவாயு பயன்படுத்தப்பட்டது. இந்த தாக்குதலின்போது ஒரு லட்சத்து 80 ஆயிரத்துக்கும் அதிகமான குர்தீஷ் இன மக்கள் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணையில் நேற்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. அவரிடம் நீதிபதி கூறியதாவது, நீங்கள் இரசாயன ஆயுதங்கள் உட்பட அனைத்து வகை ஆயுதங்களை பயன்படுத்தி குர்தீஷ் இன மக்களை அழிக்கும்படி உத்தரவிட்டுள்ளீர்கள். இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அதற்கு ஆதாரமாக ஏராளமான ஆவணங்கள் உள்ளன. இவ்வாறு நீதிபதி கூறினார். இறுதியில் கெமிக்கல் அலிக்கு தூக்கு தண்டனை விதிப்பதாக நீதிபதி முகமது அல் உராய்பி உத்தரவிட்டார். தீர்ப்பை கேட்ட கெமிக்கல் அலி கடவுளுக்கு நன்றி என்று கூறிவிட்டு நீதி மன்றத்திலிருந்து வெளியேறினார். (எ-5)

# இந்திய முன்னாள் நீதிபதி பகவதிக்கு சட்டமா அதிபர் காட்டமான கடிதம்

2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இருந்து இலங்கையில் இடம் பெற்ற மிக முக்கிய 15 மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரிக்கவென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளை கண்காணிக்கவென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட பிரசித்தி பெற்ற சர்வதேச வல்லுநர்கள் குழுவின் தலைவரும் இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதியுமான பி.என்.பகவதி தமது வரம்பை மீறி செயற்படுவதாக குற்றஞ்சாட்டி இலங்கை சட்டமா அதிபர் சி.ஆர்.டி.சில்வா அவருக்கு காட்டமான கடிதமொன்றினை வரைந்திருப்பதாகசெய்திவெளியாகி இருக்கிறது.

இந்த சர்வதேச வல்லுநர்கள் குழுவின் தலைவரும் இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதியுமான பி.என்.பகவதி மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளில் எவ்வித குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களும் காணவில்லை என்றும் அதில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பக்கச்சார்பான தலையீடு குறித்தும் இந்த மாத முற்பகுதியில் அடுத்தடுத்து இரண்டு பகிரங்க அறிக்கைகளை வெளியிட்டிருந்தார்.

இந்த அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கும் சில விடயங்கள் குறித்தே தனது கடுமையான அதிருப்தியை இலங்கை சட்டமா அதிபர் சி.ஆர்.டி.சில்வா அவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் வெளியிட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ச-3,5)

# ஜே.வி.பி.போன்ற கட்சிகளே பிரச்சினைக்கு முக்கிய காரணம்

## அமைச்சர் ஜெயராஜ் தெரிவிப்பு

1983 ஆம் ஆண்டு தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்காக அரசாங்கமோ அல்லது சிங்களவரோ மன்னிப்புக் கேட்கவில்லை. அப்படியான நிலையில் தற்போது சில தமிழர்கள் கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்டமைக்காக ஏன் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கேள்வி எழுப்பியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதனை நான் ஆதரிக்கவில்லை.

ஒரு தனியரசு கேட்கும் சிறுபான்மை இனத்துக்கு மிகச் சிறிய மாவட்ட அளவிலான சபை அதிகாரத்தை முன்வைப்பது என்பது இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுத்தாது. இந்திய இணைப்பாட்சி முறை இங்கு அறிமுகப்படுத்தப்படவேண்டும். இந்திய இணைப்பாட்சி முறையை அறிமுகப்படுத்துவதால் இனப்பிரச்சினைக்கு தீர்வு மட்டுமல்ல இந்தியாவும் நமக்கு உத்தரவிட்டுக்கொண்டிருக்காது. இந்தியாவும் நமக்கு உதவக்கூடிய நிலைமை உருவாகும்.

இருப்பினும் இது தொடர்பில் சுதந்திரக் கட்சிக்கு எதிராக வாக்களிக்கமாட்டேன். நான் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவன் என்று அழுத்தமாகக் கூறுகிறேன். ஜே.வி.பி. போன்றவைகள்தான் நாட்டின் ஒட்டுமொத்த பிரச்சினைகளுக்குமே காரணம்.

மகிந்த அரசாங்கமானது விடுதலைப் புலிகள் தொடர்பில் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்வதால் கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றம் போன்றவை நிகழ்கின்றன. இவை நிகழ்ந்தாலும் அதன் மூலமாக கொழும்பில் உள்ள அனைவருமே அச்சமின்றி வாழ முடிகிறது.

நாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் குறிப்பிட்ட மக்கள் குடியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வட பகுதியில் சிங்களவரால் வாழ முடியுமா? எங்கும் எவரும் வாழலாம் என்பது கடுமையாக மீறப்பட்டுள்ளது.

ஆனால் சில தமிழர்களை வெளியேற்றினால் அரசாங்கம் மிகக் கடுமையான விமர்சனங்களுக்குள்ளாகிறது. இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

1983 ஆம் ஆண்டு இனப்படுகொலைகளுக்காக அரசாங்கமோ அல்லது சிங்களவரோ மன்னிப்புக் கேட்டனரா? இப்போது மட்டும் ஏன் கேட்க வேண்டும்? அரசாங்கம் பைத்தியக்காரர்களால் நடத்தப்படுவதாக ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார். இப்படியான தரம் தாழ்ந்த சொல்லாடல்களை அவர் எப்படிப் பயன்படுத்தலாம் என அவர் கேள்வி எழுப்பினார். (எ-1)

# கடத்தலுடன் தொடர்புடைய ஐவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கொழும்பில் தமிழ் வர்த்தகர் ஒருவரை கடத்தி பணம் பறித்தமை தொடர்பாக ஐந்து பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு வடக்கு பொலிஸ் மூத்த கண்காணிப்பாளர் ஜயந்த குணதிலக்க இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது;

யூன் 19 ஆம் திகதி அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இரண்டு பொலிஸ் குழுவினர் சந்தேக நபர்களிடம் விசாரணை நடத்தினர்.

இந் நிலையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கடத்தல் குழுவினரை அடையாளம் கண்டனர். அக் குழுவின் தலைவராக செயற்பட்ட விமானப் படை யின் முன்னாள் அதிகாரிதற் போது தடுத்து வைக்கப்பட் டுள்ளார். மேலும் ஐந்து பேர் கைது செய்யப்பட் டுள்ளனர் என்றார். (எ-5)

காரைநகர் - புகலி
சிவசுப்பிரமணியர் ஆலய அலங்கார உற்சவம் -2007
5 ஆம் நாள் உற்சவம்



நிகழும் சர்வசித்து வருடம் ஆனித் திங்கள் 11 ஆம் நாள் (25.06.2007) -இன்று- திங்கட்கிழமை 5-வது நாளாக அலங்கார உற்சவம் தொடர முருகன் திருவருள் கைகூடியுள்ளது.
காலை 8.00 மணிக்கு அபிஷேகம்
11.30 மணிக்கு விசேட பூசை
மாலை 4.00 மணிக்கு அபிஷேகம்
மாலை 5.30 மணிக்கு கலை நிகழ்ச்சி (கருங்காலி முருகமூர்த்தி அறநெறிப்பாடசாலை மாணவர்கள்)
7.00 மணிக்கு வசந்த மண்டப பூசை
29.06.2007 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு முருகப்பெருமான் தேருக்கு எழுந்தருளுவார்.
30.06.2007 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு தீர்த்தோற்சவம்
உற்சவகுருக்கள்:-சிவஸ்ரீ தெ.சோமசுந்தரக் குருக்கள்
உற்சவ காலங்களில் அடியவர்கள் ஆசாரசீலர்களாக வருகை தந்து எம்பெருமான் திருவருளைப் பெற்றுய்ய வேண்டுகிறோம்.
சுபம்
ஆலய பரிபாலன சபையினர்
புகலி சிவசுப்பிரமணிய கோவில்,
காரைநகர்.
(C-177)

# இலங்கையில் கடந்த 2 வருடங்களில் 10 ஆயிரம் இராணுவம் தப்பியோட்டம்

2005 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து 2007 ஆம் ஆண்டு ஏப் ரல் 20ஆம் திகதி வரையிலான காலப் பகுதி யில் இராணுவத்திலிருந்து 93 அதிகாரிகளும் 10 ஆயிரத்து 60 இராணுவத்தினரும் தப்பியோடியுள்ளதாக செய்திகள் வெளியாகி யுள்ளன.

இராணுவத்தின் தரவுகளின்படி ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உள்ளனர். இந்த பலம் காகிதத்தில் இருந்தாலும் பிரித்தானியாவின் இராணுவத் தொகையை விட அதிகம் இருந்த போதும் கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் இராணுவத்திலிருந்து 93 அதிகாரிகளும் 10 ஆயிரத்து 60 இராணுவத்தினரும் தப்பியோடியுள்ள தாக இராணுவத்தினரின் பதிவேடுகள் கூறுகின்றனர்.

சிலர் தொடர்ச்சியான பொது மன்னிப்புக் களின் மூலம் மீண்டும் இணைந்துள்ளனர். கடந்த ஜனவரி 20 ஆம் திகதி முதல் பெப்ரவரி 12 ஆம் திகதி வரை இறுதியான பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருந்தது. இதன் போது 3 ஆயிரத்து 979 பேர் மீண்டும் சேவைக்கு திரும்பியிருந்தனர். இதனுடன் சமர்களில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த படையினரின் வெற்றிடங்களும் உள் ளன. படையினரின் பலத்தை அதிகரிப்பதில் அதிகா ரிகள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்கள் தோன்றி யுள்ளன.

சாதாரணமாக ஒரு பற்றாலியன் 855 பேரைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். ஆனால் சிறிலங்காப் படையில் உள்ள பற் றாலியன்கள் 400-500 துருப்புக்களைக் கொண்டதாகவே உள்ளது.

எனவே நலிவடைந்த பற்றாலியன் களை இணைத்து உரிய எண்ணிக்கை கொண்ட பற்றாலி யன்களை உருவாக்கினால் தான் முழுமையான பலனை அடையமுடியு மென சிலர் கருதுகின்றனர் எனவும் கூறப்பட்டது. (எ-5)

# பெண் புலி உறுப்பினரை தடுத்து வைக்க உத்தரவு

மாவிலாறு தாக்குதலுடன் தொடர்புடையதாக கூறப்படும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பெண் உறுப்பினர் ஒருவரை தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இப் பெண் திருக்கோவில் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

சந்தேக நபர் 2003 ஆம் ஆண்டு அரச சார்பற்ற நிறுவனமொன்றில் பணியாற்றியுள்ளதாகவும் இவர் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றிருந்ததாகவும் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். (ச-3)

# புற்று நோயை தடுக்கும் பூசணிக்காய்

பூசணிக்காய்க்கு புற்று நோயை தடுக்கும் ஆற்றல் உள்ளது என்று ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மலேசியா பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்பத்துறை பேராசிரியர் நூர் அஜியா அப்துல் அஜீஸ் பல ஆண்டுகளாக ஆய்வு மேற்கொண்டார். புற்று நோய் தொடர்பான அவர் மேற்கொண்ட ஆய்வு முடிபுகளில் கூறப்பட்டு இருப்பதாவது;

பூசணிக்காய்க்கு புற்று நோயை குணமாக்கும் ஆற்றல் உள்ளது. பூசணிக்காயில் ஒருவித ஸ்டார்ச் உள்ளது. இந்த ஸ்டார்ச்சுகள் புரொப்பியோனிக் அமிலத்தை உருவாக்கும் ஆற்றல் கொண்டவை.

இந்த அமிலம் காரணமாக பூசணிக்காயில் உள்ள ஸ்டார்ச் புற்று நோயை உருவாக்கும் செல்கள் பலவீனப்படுத்துகின்றன. தீமை தரும் பக்றீரியாக்களும் அழிந்து விடுகின்றன.

பூசணிக்காயின் சதைப் பகுதியை மாவாக்கி உலர்த்தியும் பயன்படுத்தலாம். இதன் மூலமும் புற்றுநோயை குணமாக்க முடியும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். பூசணிக்காயில் அதிக அளவு நார்சத்தும் உள்ளது. தாது உப்புக்களும் உள்ளன. (எ-5)

SATS-TECH Satellite System




நேரடியாக செய்மதி மூலம் சன் ரீவி,சன் நியூஸ்,ஜெயா ரீவி,பொதிகை உட்பட 40ற்கும் மேற்பட்ட சானல்களை இடையூறு இன்றி DVD தரத்துடன் கண்டு களிக்கக்கூடிய (Digital dish Antenna System) சிஸ்டம், ஒரு வருட விற்பனைக்கு பிந்திய சேர்விஸ் உத்தரவாதத்துடன் நம்ப முடியாத விலையில்!!!

KU band System
Rs.8000/= தொடக்கம்
Rs.17000/= வரை

C Band System
Rs.16500/= தொடக்கம்
Rs.25000/= வரை

C & KU,Multi System
Rs.18000/= தொடக்கம்
Rs.26000/= வரை

★ நேரடி இறக்குமதியாளர்கள், குடாநாட்டில் 1000ற்கும் மேற்பட்ட சிஸ்டங்களை விற்பனை செய்துள்ளோம்.
★ TRCSL ன் அங்கிகரிக்கப்பட்ட விற்பனை நிலையம் (செய்மதி தொலைக்காட்சி உபகரணங்கள் விற்பனை இணைப்பு உட்பட)
★ இலவச தொழில்நுட்ப ஆலோசனைகள் (Dish Antenna மற்றும் கேபிள் ரீவி சம்பந்தமாக)
★ 20 வருட அனுபவம் (செய்மதி தொலைக்காட்சி மற்றும் கேபிள் ரீவி Analog and Digital)
★ அனைத்து கேபிள் ரீவி உபகரணங்களும் குறைந்த விலையில்
★ மொத்தக் கொள்வனவிற்குச் சிறப்பான தள்ளுபடி.

மேலதிக விபரங்களுக்கு:-
சாட்ஸ் டெக் இன்ஜினியர்ஸ்
இல.182, கே.கே.எஸ்.வீதி (குளப்பிட்டி சேச் அருகாமை)
குளப்பிட்டி, கொக்குவில்.
Phone :-021 222 5908
Hot Line :- 077 7710785
(c-191)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் ③

பகுதி –I
நேரம் – 45 நிமிடம்


ஆக்கம்: க. கைலநாதன்
யா/ சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ
வித்தியாசாலை

**1ஆம் 2ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருக்களிடையே மிக நெருங்கிய தொடர்புடைய இரண்டு உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையின் கீழ் கோடிடுக.**

1.



1) B உம் D உம் 2) D உம் E உம் 3) A உம் C உம்


2.



1) B உம் D உம் 2) A உம் E உம் 3) E உம் F உம்

**கீழே காணப்படும் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவத்தின் படி ஒவ்வொரு வாக்கியத்திலும் இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

3.

விமானம் ஆகாயத்தில் ........................................
1) ஓடுகிறது 2) பறக்கிறது 3) நீந்துகிறது

4.

கப்பல் நீரில்........................................................
1) மிதக்கிறது 2)ஓடுகிறது 3)பறக்கிறது

**கீழேயுள்ள ஒவ்வொரு உருவ வரிசையிலும் படங்களினாற் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கை சரியாகக் காட்டுவதற்கு அவற்றின் கீழ் 1,2,3,4,5 ஆகிய எண்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

5.

(...............) (...............) (...............) (...............) (...............)

6.

(...............) (...............) (...............) (...............) (...............)

**பின்வரும் ஒவ்வொரு வினாவையும் வாசித்து பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

7.மாதங்கி கஜனியின் அக்கா ஆவாள். கிருத்தி மாதங்கியின் அக்கா ஆவாள். கீர்த்திகா மாதங்கியின் தங்கையாவாள் .இந்த நான்கு பேரிலும் மூத்தவள் யார்?
1) மாதங்கி 2) கிருத்தி 3) கூறமுடியாது

8. மேலேயுள்ள வினாவின் படி நான்கு பேரிலும் இளையவள் யார்?
1) கஜனி 2) கீர்த்திகா 3) கூறமுடியாது

**சரியான விடையின் இலக்கத்தை அடைப்புக்குறியுக்குள் எழுதுக.**

9.மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்ற பழமொழியின் கருத்தைத் தரும் வாக்கியம்
1) மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் ஆபத்தில் மாட்டிக்கொள்ளல்
2) வெளித்தோற்றத்தை மாத்திரம் பார்த்து எதனையும் ஒப்பிடுவது ( )


10. வீடுகளில் கதவுகள் ஜன்னல்கள் வைக்கப்படுவதற்கான காரணம்
1) தொடர்ந்து சுவர் எழுப்புவது கஷ்டமாகையால்
2) வீட்டுக்கு அழகு தரும் என்பதால்
3) ஒளியும் வளியும் கிடைக்கவேண்டும் என்பதால் ( )


11. இன்று யூன் மாதம் 27ஆம் திகதி . எனது தம்பியின் பிறந்த தினத்திற்கு இன்னும் ஒரு வாரமே உள்ளது. தம்பி பிறந்ததினம் வருவது
1) யூலை மாதம் 4 ஆம் திகதியாகும் 2) யூலை மாதம் 7 ஆம் திகதியாகும்
3) யூலை மாதம் 9ஆம் திகதியாகும்


**பின்வரும் குறியீடுகளை அவதானிக்குக.**





**மேலுள்ள குறியீடுகளைக் கொண்டு பின்வரும் வாக்கியங்களைப் பூரணப்படுத்தும் வகையில் சரியான குறியீடுகளின் கீழ் கோடிடுக.**

12. 


13. 


14. 


**பல பொருட்களின் விலைகளின் கூட்டுத்தொகை பின்வரும் கூண்டுகளில் காட்டப்பட்டுள்ளன.**




**மேலேயுள்ள விலைகளின் படி , கீழே காணப்படும் ஒவ்வோர் வினாவிற்கும் உரிய விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

15. பேனையின் விலையாக இருக்கக் கூடியது
1) ரூபாய் 20.00 2) ரூபாய் 10.00 3) ரூபாய் 30.00


16.புத்தகத்தின் விலையாக இருக்கக் கூடியது
1) ரூபாய் 30.00 2) ரூபாய் 25.00 3) ரூபாய் 40.00


**கீழே காணப்படும் பாடல் பகுதியை வாசித்து கோடிடப்பட்டுள்ள சொற்களை கருத்திற் கொண்டு வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.**

ஏராளம் நெல் விதைத்து
இன்பம் காண்போமே உலகில்
தாராளம் தானியஞ் செய்து
தரணியிலே வாழ்வோமே நாமே


17. இப்பாடல் பகுதியில் ஏராளம் என்பது
1) குறைவு 2) குறைந்தளவு 3) அதிகளவு

18. தரணியில் என்றால்
1) வயலில் 2) பூமியில் 3) மண்ணில்

19. இந்த உருவில் காட்டப்பட்டுள்ள அட்டைத்தாள் பெட்டியைச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட அட்டைத்தாள் துண்டை தெரிவு செய்க.



20. அருகே சிறிய சதுரமுகி கட்டைகளைக் கொண்டு ஆக்கப்பட்ட பெரியதொரு சதுரமுகியாகும். இச் சதுரமுகியில் உள்ள சிறிய சதுரமுகிக் கட்டைகளின் எண்ணிக்கை யாது?

(...................)

**பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.**

21. பக்கத்தில் தரப்பட்டுள்ள சதுரத்தில் நிழற்றியுள்ள பகுதியின் பரப்பளவு 6 $Cm^2$ ஆயின் ABCD சதுரத்தின் பரப்பளவு யாது?



22. ஆதிகாவிடம் 36 மாபிள்கள் இருந்தன. அவள் அதில் 1/3 பங்கைத் திலகாவுக்குக் கொடுத்தாள். எஞ்சிய மாபிள்களில் 2/3 பங்கை கதிருக்குக் கொடுத்தாள். திலகாவுக்கும் , கதிருக்கும் கொடுத்த பின் ஆதிகாவிடம் எஞ்சியிருக்கும் மாபிள்கள் எத்தனை? (..........)


23. ஓர் உண்டியலில் இருந்த பணத்தில் ரூபா 5 .00நாணயங்கள் 7 உம் ரூபா 2 .00 நாணயங்கள் 16உம் ரூபா 1.00 நாணயங்கள் 9உம் 50 சத நாணயங்கள் 10உம் எடுத்த பின் உண்டியலில் மீதியாக ரூபா 28 .00 இருந்ததெனில் பணம் எடுக்க முன் உண்டியலில் இருந்த பணத்தைக் காண்க. (......................)

**இலக்கம் 24,25 ஆகிய வினாக்களில் N,M ஆகிய கூண்டுகளுக்குப் பொருத்தமான எண்களைத் தந்துள்ள விடையின் கீழ் கோடிடுக.**

24.
```
  6 5 [N]
+ 2 [M] 4
---------
  9 1 7
```
1. N=3 , M=5
2. N=3 , M=6
3. N=4 , M=6

25.
```
    4 2 3
x     [N]
---------
[M] 3 8 4
```
1. N=7 , M=8
2. N=6 , M=3
3. N=8 , M=3

**உருவில் உள்ள வெற்று அடைப்புகளுக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.**

26.



**கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களினதும் எழுத்துக்களினதும் நிரையை அவதானித்து 27 - 30 வரை யிலான வினாக்களுக்குரிய விடையின் கீழ் கோடிடுக.**

M22H38M775RRR2H23MMG42NT54H8


27. இலக்கங்களை விட எழுத்துக்களின் எண்ணிக்கை
1) கூட 2) குறைய 3) சமன்

28. இங்கு மிகக் குறைவாகக் காணப்படுவது
1) எழுத்து T 2) எழுத்து H 3) இலக்கம் 4

29. இங்கு ஒரு எழுத்துக்கு முன்னும் பின்னும் ஒரே வகையான இலக்கம் காணப்படுகிறது அந்த இலக்கம்
1) 3 2) 5 3) 2

30. இங்குள்ள ஒற்றை எண்களின் முழு எண்ணிக்கை
1) 08 2) 06 3) 07

**கீழே காணப்படுவது சதுர வடிவமான கடதாசித் துண்டு ஒன்றை நான்காக மடித்து அதிலிருந்து முக்கோண வடிவத்துண்டு ஒன்றை அகற்றிய முறையாகும் அதன் படி இக் கடதாசித்துண்டை பிரித்துப் பார்த்தால் அவதானிக்கக்கூடிய முறை**

31.



32. அருகேயுள்ள உருவில் நிழற்றப்பட்ட பகுதியை முழுவதன் பின்னமாக எழுதினால்.

1) 1/6 2)2/8 3) 1/8

**கொடுக்கப்பட்ட கூற்றுக்களில் மிகவும் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

33. நாம் சிறுவயதிலேயே மிகத் திறமையாக கல்வி கற்பது
1) வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள 2) பெற்றோர் எம்மை வற்புறுத்துவதனால்
3) பிற்கால வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள

34. நாம் வீதி விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது ஏனெனில்
1) வீதி விதிகளை அனுசரித்து நடந்தால் விபத்துக்களை தவிர்க்கலாம்
2) வீதி விதிமுறைகளை அனுசரிக்காவிட்டால் தண்டனை விதிக்கப்படுவதால்
3) அரசாங்கம் வலியுறுத்திக் கூறுவதால்


35. இது ஒரு பழமாகும். எமது நாட்டில் எல்லா பிரதேசங்களிலும் இம் மரம் வளரும். இம்மரத்தின் இலை மிகப் பெரியது. ஒரு மரத்தில் ஒரு தடவையே காய் கிடைக்கும். ஒரு பூ பூத்து பல காய்கள் காய்க்கும். 1)அன்னாசி 2) பப்பாசி 3) வாழை

36. குறியீடுகளைப் பயன்படுத்தி 'கராம்பு' என்பதை □△⊡○ எனவும் 'குருடன்' என்பதை ◊△⊕◎ எனவும் எழுதப்பட்டுள்ளது ஆயின் 'கருடன்' என்பதை குறியீடுகள்-மூலம் சரியாக எழுதும்போது? 1) □△⊕◎ 2) □⊕△◎ 3) △⊕□◎


37.1, 2, 3 என்பதை A,C,E எனவும் 2,4,6 என்பதை B,D,F எனவும் குறிப்பிடமுடியும் எனில் C+E+B என்பவற்றின் கூட்டுத் தொகையைக் குறிக்கும் விடையின் கீழ் கோடிடுக.
1) 09 2) 07 3) 08

38. இரண்டு நான்முகியினதும் மூன்று கூம்பங்களிலும் உள்ள முக்கோண முகங்களின் எண்ணிக்கை யாது? 1) 16 2)18 3) 20

பின்வரும் எண் கோலங்களை அவதானித்து இடைவெளிக்கு வரவேண்டிய பொருத்தமான எண்ணை புள்ளிக்கோட்டில் எழுதுக.

39.


(------------)

40.


(------------)

# இன்று ஒரு தகவல்

## அறிவும் ஞானமும்

ஓர் ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜாவுக்கு ஒரு பிள்ளை. அந்தப் பிள்ளைக்கு விபரமே தெரியாது...

அவன் ஒரு முட்டாள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனாலும் அவன்தான் அடுத்தபடியாக ஆட்சிக்கு வர வேண்டியவன். ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டிய ஒருவன் இப்படி இருந்தால் என்ன செய்வது என்பது எல்லோருக்கும் உள்ள கவலை.

மன்னர் அமைச்சர்களைக் கூட்டினார். ஆலோசனை கேட்டார். "இவனை இன்னொரு நாட்டுப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பிப் பார்க்கலாம். அங்கே போய்ப் படித்துவிட்டு வரட்டும் நிறையப் படித்துவிட்டு நல்ல ஞானத்தோடு திரும்பி வரட்டும் அதன்பின் பார்த்துக் கொள்ளலாம்'' என்று அவர்கள் ஆலோசனை கூறினார்கள்.

மன்னருக்கும் அது சரி என்று தோன்றியதால் மகனை வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்தார். இவனும் போனான். ஒரு பல்கலைக்கழகத்திலே சேர்ந்தான். நிறையப்படித்தான். அதன் பின்னர் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதினான்.

"தந்தையே! நான் நிறையப் படித்துவிட்டேன். இனிமேல் நாடு திரும்பலாம் என்று நினைக்கிறேன்'' என்று எழுதினான். மன்னருக்கு மிக்க மகிழ்ச்சி. பிள்ளை படித்துவிட்டான் என்ற ஆனந்தம். உடனே பையன் திரும்பிவர ஏற்பாடு செய்தார்.

இளவரசன் நாடு திரும்பினான். அதைக் கொண்டாடுவதற்காக அரண்மனையிலே ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள். முக்கியமானவர்களெல்லாம் அதில் கலந்துகொண்டார்கள். அந்த விருந்துக்கு முனிவர் ஒருவரும் வந்திருந்தார்.

அவர் இளவரசன் கிட்டே போய் உட்கார்ந்து விசாரித்தார் "என்னப்பா... எப்படி படித்திருக்கிறாய்?''என்று கேட்டார். நிறையப் படித்துவிட்டு வந்திருக்கிறேன் என்றான் அவன்.

"என்ன படித்தாய்?'' முனிவர். அவன் தான் படித்தது பற்றிய விபரங்களையெல்லாம் முனிவருக்குக் கூறினான். அவன் அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே முனிவர் தன் மோதிரத்தைக் கழற்றி தன் உள்ளங்கையிலே வைத்து மூடினார். அப்படியே கையை அவன்முன் நீட்டினார்.

"இதற்குள் என்ன இருக்கிறது? சொல் பார்க்கலாம்?'' என்றார். இளவரசன் ஒரு கணம் யோசித்தான். சிறிது நேரத்தின் பின் "உங்கள் கைக்குள் இருப்பது வட்டமான ஒரு பொருள் நடுவிலே துளை இருக்கும்'' என்றான்.

முனிவர் திகைத்துவிட்டார். பையன் பெரிய அறிவாளி ஆகிவிட்டான் என நினைத்தார். பிறகு கேட்டார் "சரி- என் கையிலே இருப்பது வட்டமான பொருள் நடுவிலே துளை இருக்கும் என்பதை சரியாகக் கூறி விட்டாய். அதன் பெயர் என்ன? சொல் பார்க்கலாம்'' என்றார்.

இளவரசன் சிறிது நேரம் யோசித்தான். பின் சொன்னான் முனிவரே, நான்படித்த விஞ்ஞானம் உங்களுக்குப் பதில் சொல்ல உதவவில்லை... இருந்தாலும் சொல்கிறேன்... அது ஒரு வண்டிச் சக்கரம் என்றான்.

முனிவர் சிறிது நேரம் யோசித்தார். அப்பொழுது அவருக்குப் புரிந்ததாம்... "முட்டாளை படிக்கவைக்கலாம்... ஆனால் சிந்திக்க வைக்கமுடியாது'' என்பது!

தகவல் அறிவு ஞானமாகாது! என்கிறார் ஓஷோ. ஏனெனில் தகவல்கள் மாறுதலை ஏற்படுத்துவதில்லை- ஆனால் ஞானம் என்பது மாறுதலால் உண்டாகக் கூடிய ஒன்று என்கிறார் அவர்.

மனம் சரியான வழிக்கு வரவேண்டும் அதன் பின் படிக்கிற கல்விதான் உண்மையான கல்வி. மனம் சரியாக வருவதற்கு என்ன வழி என்று கேட்டால் ! மனிதன் முழு மாறுதலுக்கான வழிமுறை தியானம் தான் என்கிறார் அவர்.

அதனாலே நிறையப் படித்திருக்கிறேன் என்று சொல்கிறவர்கள் எல்லோரும் ஞானம் உள்ளவர்களென நினைத்து விடக்கூடாது...

ஒருத்தர் பெரிய மனிதர் ஒருவரை அழைத்துக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தினார்.

"சார்... நிறையப் படித்திருக்கிறார். மூன்று எம்.ஏ. வாங்கியிருக்கிறார் ஆனால் ஒன்று... அப்ப்ப கொஞ்சம் திருடுவார் அவ்வளவுதான் மற்றப்படி அவர் 'ஒரு பெரிய அறிவாளிதான்!'' என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மாதிரி வினாத்தாள் - 2 பகுதி - II இன் விடைகள்

1. 1) தந்தை தாயை பேணுதல்
   2) பணி
   3) மனம் உருகுதல்
   4) சிறிது
   5) தந்தை
   6) நான் நினைத்தேன்
   7) பசு
   8) நன்றி புரிந்தோர்
   9) நீங்கள்
   10) பருவம் பார்த்து பயிர் செய்தல்
2. 1) மழை காரணமாக போக்குவரத்து தடைப்பட்டதால் தாமதமாகச் சென்றேன்.
   2) அழகிய சிகிரியா மலைக்குன்று அநுராதபுரத்தில் அமைந்துள்ளது.
3. 1) அறிவு உண்டாதல் 2) நிலை கொள்ளல்
4. 1) நான் உள்ளே வரலாமா
   2) தயவு செய்து வாயிலை மூடுங்கள்
   3) தயவு செய்து எனக்கொரு பென்சில் தாருங்கள்.
5. 1) அப்பா 2) நீலநிறம் 3) மயில்
6. 1) வெடிபலவன் 2) கடல்மாங்காய் 3) இறப்பர் வித்து 4) புலிநகம்
7. 1) கட்டடவேலை 2) தையல் 3) தச்சுத்தொழில் 4) இரும்படித்தல்
8. 1) 3 2) 2 3) 1 4) 2 5) 3 6) 4 7) 1 8) 2 9) 3 10) 1
9. அ) 1.குறடு
   2.ஆணி பிடுங்கவும் இறுக்கவும்
   ஆ) 1. திருகாணி செலுத்தி
   2. திருகாணி கழட்டவும் இறுக்கவும்
   இ) 1.ஓபனர் 2. போத்தல் மூடி திறக்க
   ஈ) 1. சுரையாணி சாவி 2. சுரைகளை கழட்ட இறுக்க
10. 1) 206 2) 21:45 மணி 3) 1/2 4) 30 cm 5) 6.40[illegible]

## கலந்துரையாடல்

வெளிமாவட்ட கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களின் தற்காலிக இணைப்பு தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 9.00 மணிக்கு Science Hall இல் நடைபெற விருப்பதால், தங்களுக்கு கிடைக்கப் பெற்ற தற்காலிக இணைப்பு கடித மூலப் பிரதியுடன் வருகை தருமாறு வேண்டப்படு கின்றனர்.

இணைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாதவர்களும் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## இராசிபலன்

*25.06.2007*
*(ஆனி 11, திங்கட்கிழமை)*
*தசமி பிற்பகல் 01.36 மணிவரை*
*சித்திரை காலை 08.26 மணிவரை*
*இராகுகாலம் 7.25- 08.55 மணிவரை*
*சுபநேரம் 11.55-01.25 மணிவரை*
*சித்தாமிர்தம்*

**மேடம்:-** கலந்துரையாடல், போசன சுகம், இஷ்ட சித்தி, நல்ல செய்தி.

**இடபம்:-** மனமகிழ்ச்சி, உற்சாகமான நிலை, அதிக பிரயாசை, சத்துரு ஜெயம்.

**மிதுனம்:-** குடும்பக்கவலை, காரிய இடையூறு, உஷ்ண வியாதி, பூர்வ புண்ணிய கருமம்.

**கடகம்:-** தாய்வழி உறவு, கல்வியில் ஆர்வம், நண்பர்கள் சந்திப்பு, ரோகபயம்.

**சிங்கம்:-** கூட்டு முயற்சி, பொருள் சேர்கலை, அதிகாரம், சுப நிகழ்வு.

**கன்னி:-** பணவிரயம், விவாதம், நிலை மாற்றம், முயற்சி தாமதம்.

**துலாம்:-** புதிய முயற்சி, உறவினர் சந்திப்பு, போசன சுகம், தன்னம்பிக்கை.

**விருச்சிகம்:-** இடமாற்றம், உறவினர் மனஸ்தாபம், தொழில் மந்தநிலை, சுபசெலவு.

**தனுசு:-** குடும்ப மகிழ்ச்சி, கீர்த்தி, நல்ல வருமானம், தேக நலன்.

**மகரம்:-** தூரதேச் செய்தி, தேக நலன், கடின முயற்சி, அதிகாரம்.

**கும்பம்:-** புதிய திட்டமிடல், பிதா சிந்தை, ஆரோக்கியக்குறைவு, பிரயாணம்.

**மீனம்:-** அபகீர்த்தி, எதிரிகள் தொல்லை, காரியதடங்கல், போசன சுகம்.

-வளவன்

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



### நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### மஞ்சத் திருவிழா

### முத்திதா நாகபூஷணியே !

கற்றவர்க் கினியாய் நயினையம் பதிவாழ்
காரணி நாரணன் றங்காய்
மற்றவ ரறியா மரகத வரையின்
வாமமே வளர்பசுங் கொடியே
நற்றவ ரோடு சேயெனை இருத்தி
நாத நாதாந்தமுங் காட்டி
முற்றுமாய் நிறைந்த பூரணா னந்த
முத்திதா நாக பூஷணியே

நயினைச் சித்தர்-ஸ்ரீமத் முத்துக்குமாரசாமிப்புலவர்

### மன்றாடி வேண்டிடுவோம்

அஞ்சுதலை நீக்கி ஆறுதலைத் தருபவள்
அகிலம் போற்றிட நயினையில் வாழ்பவள்
நெஞ்சம் உருகித் துதித்திடும் யாவர்க்கும்
தீராத வினைகள் தீர்த்துக் காப்பவள்
மஞ்சத்திலேறி அருள்தர வருகின்றாள்
மன்றாடி வேண்டி மனத்துயர் போக்குவோம்

மு.முத்துக்குமார்

### மஞ்சத்தில் வாரீரம்மா

அகரமென மன்னுயிர்க்கோர் அன்னையாகி
அருவமுரு வருவுருவ வழகு தாங்கி
வகரமென சிகரபத வழிப்படுத்தும்
வல்லபையாய் மலர்ந்திடுமைம் பூதமாகி
பகருமெழு பவமுழலும் சராசரங்கள்
படைத் தளிக்கும் பார்பதியே பரமசிவன்
அக மகிழும் பரமேஸ்வரியே மணிபல்லவத்தின்
அம்பிகையே மஞ்சத்தில் வாரீரம்மா

சுபா காசிநாதன்

### மணித்தீவின் நாயகியே

கடல் கடந்து வந்தோமம்மா நாயகியே
உன் அருளைப் பெறவந்தோம் நாயகியே
பாம் பணையில் வீற்றிருக்கும் நாயகியே
பதம் பணிந்து வந்தோமம்மா நாயகியே
அற்புதங்கள் பல செய்த நாயகியே
விண்ணுயர்ந்த கோயில் கொண்ட நாயகியே
வினைதீர்க்க வந்தோமம்மா நாயகியே
அவலம் தீர்த்து காத்திடம்மா நாயகியே

நீர்வை ச.ரூபஜெயன்

### மஞ்சத்தில் வாரீர் அம்மா

மூலமுறு பழம் பொருளின் முதலே சக்தி
முகிழ்த் தெழுந்த உற்பவத்தின் முடிவே உன்னை
ஞாலமுறு உயிர்வகைகள் அண்டகோடி
நாடிவர நயினையிலே கோயில் கொண்டு
சீலமுறு தெய்வீகக் காட்சி நல்கி (த்)
திசை மிசை கொண்டு அடியார்கள் சிரமேற்கூப்ப(க்)
காலமெல்லாம் நின் கருணை காட்டி நின்றாய்
கண்மணியே மஞ்சத்தில் வாரீர் அம்மா

நயினைக் கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை

### எம் இனத்தை ஆள்பவள் நீ

சுற்றிவரும் சூரியன் நீ
சுயமில்லா சந்திரன் நான்
உற்ற கோயில் தனிலிருந்து
வரமளிக்கும் தெய்வ மன்றோ!
ஆழ்கடல் கடந்து வந்தோம்
அன்னை நீ பிள்ளை நான்
ஏழ் உலகும் ஆண்டவள் நீ
எம் இனத்தைக் காத்தருள் வாய்

கவிஞர் செ.பரமநாதன் , தாவடி

> எப்பொழுதும் பயந்து கொண்டிருப்பதை விட ஒரு தடவை தைரியமாக எதிர்ப்பது மேலானது.
>
> -இங்கிலாந்து

வலம்புரி

## ஜனாதிபதி மகிந்தவின் எச்சரிக்கை நாடாளுமன்றத்தை மாற்றுமா?

மங்கள சமரவீரவின் புதிய கட்சிக்கு ஆளும் தரப்பிலிருந்து யாரேனும் கட்சி தாவினால் நாடாளுமன்றத்தை கலைக்கும் நிலைக்கு தள்ளப்படுவேன்.

இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை செய்துள்ளார். ஆளும் தரப்பிலிருந்து அமைச்சர்கள் தனது புதிய கட்சியில் இணைந்து கொள்வார்கள் எனவும் அவர்களின் உதவியுடன் மகிந்த ராஜபக்ஷவின் அரசைக் கவிழ்ப்பேன் எனவும் கடந்த வாரம் மங்கள சமரவீர சூளுரை செய்திருந்தார்.

இந் நிலையில் ஆளும் தரப்பிலிருந்து யாரேனும் மங்கள சமரவீரவின் கட்சிக்குத் தாவினால் நாடாளுமன்றத்தைக் கலைப்பேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருப்பது மங்களவின் சூளுரை மகிந்தவை பயமுறுத்தியுள்ளதெனும் உண்மையை வெளிப்படுத்தியுள்ளது.

அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட மங்கள சமரவீரவும் ஸ்ரீபதி சூரியாராட்சியும் மகிந்தவை வீழ்த்துவதில் மிகவும் உறுதியாகவுள்ளனர்.

மகிந்தவை ஜனாதிபதியாக்கியது நானே! எனவே அவரை பதவியிலிருந்து நீக்க என்னால் முடியுமென கங்கணம் கட்டியுள்ள மங்கள சமரவீரவை, எதிர்கொள்வதில் ஜனாதிபதி மகிந்தவுக்கு புதிய தலையிடி ஏற்பட்டுள்ளது.

வினை விதைத்தவன் வினையறுப்பான் என்ற முதுமொழி ஜனாதிபதி மகிந்தவுக்கு சாலப் பொருத்தமானது.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் பொது இணக்கப்பாட்டு உடன்படிக்கையைச் செய்து விட்டு அந்தக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களை தம் பக்கம் இழுத்துக்கொண்டது மகிந்தவின் வினை விதைப்பாகும்.

ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை மட்டும் சாட்டாகக் கொண்டு அந்த கட்சியிலிருந்து விலகி ஆளும் தரப்புடன் இணைந்து கொண்டவர்கள் நன்றி மறந்தவர்களாக இருந்ததுடன் தம்மை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காப்பாற்றுவார் எனவும் ரணில் விக்கிரமசிங்கவினால் தம்மை எதுவும் செய்ய முடியாது எனவும் கருதினர்.

அதே நேரம் ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்களை ஆளும் தரப்பில் இணைத்துக் கொள்வது, அவர்களுக்கு முக்கியமான அமைச்சுப் பதவிகளை வழங்குவது என்ற நிலைப்பாடுகளில் ஆளும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்களிடம் உடன்பாடு இருக்கவில்லை.

எனினும் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி மகிந்தவை எதிர்க்கும் திராணியற்ற நிலையில்,இப்போது மங்களவின் புதிய கட்சி உருவெடுத்துள்ளதால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் அந்தக் கட்சியின் பக்கம் தாவி மகிந்தவை வீழ்ந்த முற்படுவர்.

இதனைத் தடுத்தாட் கொள்வதற்கு எந்த வழியும் தெரியாத ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தைக் கலைப்பேன் என வெ[illegible]ர்.

சனி மாற்றம் இலங்கை நாடாளுமன்றத்தையும் மாற்றும் போல் தெரிகிறது.

## இராணுவப் படையின் பலம் விரைவாக அதிகரிக்கப்படுகிறது

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினர் தமது தரைப் படைபலத்தை அதிகரித்து வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக பொது பாதுகாப்பு திணைக்களத்தைச் சேர்ந்த நந்தமித்ரா பிரிக்கேட் எனப்படும் ஊர்காவல் படையினரின் எண்ணிக்கை ஏறத்தாழ இரு மடங்காக அதிகரித்துள்ளது என்று ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த 18 மாதங்களில் ஊர்காவல் படையினருக்கு 18 ஆயிரம் பேரை அரசாங்கம் திரட்டியுள்ளது. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் என்ற போர்வையில் இந்த அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது. இதன் மூலம் தற்போது 19 ஆயிரம் பேரை கொண்டுள்ள ஊர்காவற் படையினரின் எண்ணிக்கை 37 ஆயிர மாக அதிகரித்துள்ளது.

இந்த படைப்பிரிவு சிங்கள கிராம்ங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபடுத்தப்படுகிறது. மேலும் இந்த காலப்பகுதியில் இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் மேலதிகமாக 8 ஆயிரம் பேரும் திரட்டப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் யூலை முதலாம் திகதியில் இருந்து இராணுவத்தினருக்கும் 50 ஆயிரம் பேரை திரட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளது. இந்த எண்ணிக்கை படையில் இருந்து தப்பியோடுவோர் மற்றும் புதிதாக கைப்பற்றப்படும் இடங்களை தக்கவைத்தல் ஆகியவற்றை ஈடுசெய்யப்பயன்படும்.

புதிதாக சேர்க்கப்படும் பொலிஸ் உறுப்பினர்களை சிறப்பு அதிரடிப்படையில் சேர்ப்பதற்கு முடிபு செய்யப்பட்டுள்ளது. கிழக்கில் இருந்து வட பகுதிக்கு நகர்த்தப்படும் இராணுவத்தினரின் இடத்தை நிவர்த்தி செய்வதற்கு அவர்கள் பயன்படுத்தப்படவுள்ளனர்.

மேலும் இராணுவம் தனது 11 ஆவது படையணியை (58 ஆவது படையணி) உருவாக்க திட்டமிட்டுள்ளது. இந்த தாக்குதல் படையணியானது மணலாற்றை மையமாகக் கொண்டு நிறுத்தப்படவுள்ளது.

அண்மையில் உருவாக்கப்பட்டு வன்னியில் நிறுத்தப்பட்ட 57 ஆவது படையணியின் சிறப்பு படையினரால் பெரிய தம்பனைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது கடும் சமர் நடந்தது.

மேலும் மூன்று சிறப்புப் படையினரும் கொல்லப்பட்டிருந்தனர். இதனிடையே மட்டக்களப்பு மாவட்டத்தின் தொப்பிக்கலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கை நான்காவது மாதத்தை எட்டியுள்ளது.

இந்த நடவடிக்கைகளில் மேஜர் உடிதா பண்டாரா தலைமையில் இரண்டாவது கொமாண்டோ றெ ஜிமண்ட் சிறப்புப் படையணியின் 7 ஆவது ஹெமுனு வோஜ் படைப் பிரிவு லெப்.கேணல் சேனவடுகே தலைமையிலும் 6 ஆவது ஹெமுனு வோர்ச் படைப் பிரிவு லெப்.கேணல் ஜயம்பதி திலகரட்ண தலைமையிலும் ஈடுபட்டு வருகிறது என்று அதில் தெரிவிக்கப்படுகிறது, (எ-5)

## இலங்கைக்கு உணவு அனுப்புவதற்கு ம.தி.மு.க.தீர்மானம் நிறைவேற்றம்

(கொழும்பு)

இலங்கைக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்புவதற்கு இந்திய அரசு அனுமதி அளிக்கவேண்டுமென இந்தியாவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக இந்திய இணையத் தளம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக் கட்சியின் புதுச்சேரி மாநிலத்தின் பொறுப்புக்குழு இத் தீர் மானத்தை நிறைவேற்றியுள்ளது. ஏ-9 பாதை மூடப்பட்டுள்ளதால் 5 இலட்சம் தமிழ் மக்கள் உணவு இன்றி நோய்க்கு மருந்தில்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அம் மக்களின் பட்டினிச் சாவைத் தடுக்க இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அனுப்பவிருக்கும் உணவு மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்ப இந்திய அரசு அனுமதி அளிக்க வேண்டுமெனவும் அத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாக இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதையும் தமது கட்சி வன்மையாகக் கண்டிப்பதாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் புதுச்சேரி மாநிலப் பொறுப்பாளர் ந.மணிமாறன் தெரிவித்துள்ளார். (ச-3)

## உயிரியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் க.பொ.த.உயர் தர வகுப்புக்களில் உயிரியல் பாடத்தை கற்பி[illegible] அனைத்து ஆசிரியர்களுக்கு[illegible] உத்தேச உயிரியல் பாடத்திட்டம் (2010) மற்றும் உயிரியல் பாடம் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பான கருத்தரங்கு எதிர் வரும் 27, 28 ஆம் திகதிகளில் காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடாத்தப்படவுள்ளது.

இக் கருத்தரங்குகளில் உயிரியல் பாடத்தை கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ச)

## ஊர்காவற் படை சிப்பாய் தற்கொலை

(அநுராதபுரம்)

அநுராதபுரம் பதவியா பொலிஸ் பிரிவின் கீழ் கடமையாற்றிய ஊர்காவற்படைச் சிப்பாய் ஒருவர் தனது துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

தற்கொலைசெய்து கொண்டவர் பிரதீப்நெத்சிறி (வயது 23) என பதவியா பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பதவியா போகஸ்கிந்திய பகுதியில் இச் சம்பவம் நேற்று முன் தினம் இடம் பெற்றுள்ளது. மரண விசாரணைகளை ஹெப்பிற்றிக் கொலாவ நீதிவான் நேற்று மேற் கொண்டார். (எ-3)

## பண்டிதமணியின் பிறந்த தினம்

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 108 ஆவது பிறந்த தினம் எதிர்வரும் 27 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

அவரின் பிறந்த தினத்தையொட்டி அவர் எழுதிய 'திருவருட்பயன்' உரைநூலை பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை விரைவில் வெளியீடு செய்யவுள்ளது. (ச)

## கொழும்பிலிருந்து தமிழரை வெளியேற்றியது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்தான்!

### சண்டேலீடர் ஆதாரத்துடன் செய்தி வெளியிட்டது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து தமிழர்களை பலவந்தமாக வெளியேற்றியது மகிந்தவின் சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷதான் என்று கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே லீடர் வார ஏடு ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் கடந்த மே மாதம் 31 ஆம் திகதி நடைபெற்ற பாதுகாப்பு இணைப்பு மாநாட்டில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையையும் அதில் பங்கேற்ற இராணுவத் தளபதிகள் ,பொலிஸ் அதிகாரிகள் பெயர்ப்பட்டியலையும் சண்டே லீடர் பகிரங்கப்படுத்தியுள்ளதோடு அந்தக் கூட்டத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளையும் வெளியிட்டு தமிழ் மக்களை கொழும்பில் இருந்து வெளியேற்றுவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே காரணம் என்று சாடியுள்ளது.

அச் செய்தியில் இடம் பெற்றுள்ள தகவல்கள் வருமாறு, பாதுகாப்பு அமைச்சின் மாநாட்டுக் கூட்டத்தில் மே 31 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்ற பாதுகாப்பு தரப்பு உயர்நிலைக் கூட்டத்தில் 75 பாதுகாப்பு தரப்பு உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

கோத்தபாய ராஜபக்ஷ இதற்குத் தலைமை வகித்தார். கொழும்புப் பாதுகாப்புக்கு முன்னுரிமையளித்து இக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கோத்தபாய ராஜபக்ஷ செயலாளர் லெப் கேணல் என்.எம்.ஹெட்டிராயாராட்சியினால் இந்த உயர் நிலைக் கூட்டம் தொடர்பான சுற்றறிக்கையில் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கையின் 51 ஆவது குறிப்பில் வடக்கு கிழக்கிலிருந்து கொழும்புக்கு வரும் தமிழர்களின் எண்ணிக்கையை கணக்கிடவும் கண்காணிக்கவும் கோத்தபாய ராஜபக்ஷ விரும்பினார் என்றும்;

அவர்கள் அடையாளம் காணப்பட்ட பின்னர் சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்புவது அல்லது வடக்கு கிழக்கில் உள்ள இடம்பெயர்ந்தோர் தங்கும் முகாம்களில் தங்க வைப்பது என்றும் விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களை பூசா தடுப்பு முகாமில் உடனே தடுத்து வைக்கவும் உத்தரவுகள் விடுக்கப்பட்டிருந்ததன் மூலம் தமிழர்கள் வெளியேற்றப்படுவதற்கு கோத்தபாய தான் காரணம் என்பதற்கு சாட்சியமாகும்.எந்த ஒரு நாட்டினது மக்களும் தங்காலிகமாகவோ நிரந்தரமாகவோ தான் தெரிவு செய்யும் இடத்தில் வாழும் உரிமை உண்டு.அதனை மீறி ஹிட்லர் காலத்தில் நாசிகள் அடைக்கப்பட்டதைப் போன்று சித்திரவதை முகாம்களுக்கு கொண்டு செல்லுதல் என்பது குடிமக்களின் உரிமை மீறலாகும்.

அதேபோல் சுற்றறிக்கையின் 60 ஆம் குறிப்பில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளுக்கு பதில் கொடுக்க மக்கள் தொகைக்கட்டுப்படுத்துதல் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்றும் இராணுவமும் பொலிஸாரும் அதிகாரிகளும் இது விடயத்தில் உடனடியாகச் செயற்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மக்கள் தொகை கட்டுப்படுத்துதல் என்பது உரிய விளக்கம் கொடுக்கப்படவில்லை.

கொழும்பு நகரில் தற்காலிகமாக தங்கியிருக்கும் வெளி ஆட்கள் சோதனையிடப்பட்டு சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்பப்படவேண்டும். கொழும்பு நகரின் நிலைமையைக் கட்டுப்படுத்த சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்கொள்ள வேண்டும். எந்த ஒரு பிரச்சினை வந்தாலும் நான் பதில் கூறிக் கொள்கின்றேன் என்றும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## ப.நோ.கூ.சங்கங்களுக்கான விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் ஆகஸ்ட் 11 ஆம் திகதி முதல் இன்றுவரை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தால் வழங்கப்பட்ட அனைத்து வழங்கற்கட்டளைகளினதும் ப. நோ.கூ சங்கத்திற்குரிய பிரதியுடன் (2-ம் பிரதி) தகுதிவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரை இன்று காலை 9.30 மணிக்கு மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் க.ஙேஷ் அறிவித்துள்ளார். (எ)

# தமிழர்களின் முக்கிய பிரச்சினைகளுக்கு...

நீதியற்ற - பயங்கரவாதத் தடைச் சட்டங்களின் கீழான நடவடிக்கைகள் இந்தக் குழப்பத்தினையும் சந்தேகத்தினை யும் மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த ஆழமான குழப்பத்தினைப் போக் குவதற்காக இலங்கைத் தீவில் சமாதானத் தை உருவாக்குவது தொடர்பான தமது ஈடு பாட்டினை வெளிக்காட்டும் மீள் உறுதியினை இணைத் தலைமை நாடுகள் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் வெளிப் படுத்த வேண்டும் என அனைத்துலக தமிழர் கூட்டமைப்புக் கோரியுள்ளது.

மேலும் இன்றுள்ள சூழலை மீள் மதிப்பீடு செய்து தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இணைத்தலைமை நாடுகள் பதிலளித்திடல் வேண்டும் என்றும் கூட்டமைப்புக் கோரி யுள்ளது. ஐம்பது வருடங்களுக்கு மேலான சிங்கள ஒடுக்கு முறையில் துன்புற்ற தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்தின் சமாதானத் தினை உருவாக்குவதற்கான திறமை மற்றும் அதன் குறிக்கோள் என்பனவற்றில் தமது நம்பிக் கை வைத்திருந்தனர்.

இலங்கைத் தீவில் ஸ்திரத்தன்மையை அல்லது தாராளவாத சமாதானத்தினை அல் லது கேந்திர நலன்களை அடைவதாயின் தமிழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் அரசியல் எதிர்காலம் தொடர்பான அச்சங்கள் நீக்கப் படல் வேண்டும் என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளதாகவே தமிழ் மக்கள் நம்பி னார்கள். ஏனெனில் தமிழ் மக்கள் இந்தச் சமாதானத்திலும் ஸ்திரத்தன்மையிலும் பங் காளிகளாகவுள்ளனர்.

இன்று புலிகள் பயங்கரவாதப் பட்டிய லில் இடப்பட்டதால் தமிழர் தரப்புப் பிரதிநிதி கள் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்து சர்வதேச தரப்புடன் பேசுவதற்கான வாய்ப் புக்கள் மறுக்கப்பட சிங்கள அரசு இராஜதந் திரிகளை வன்னிக்குச் சென்று இணக்க முயற்சிகள் பற்றிப் பேசவிடாது மறுத்து வரு கின்றமையானது முக்கியமாகக் கவனத்தில் எடுக்க வேண்டிய விடயமாகும்.

இந்தப் பின்னணியில் இந்தச் சூழல் பற்றிய இணைத் தலைமை நாடுகளின் நீதியான மீள் மதிப்பீடும், மீள் உறுதியளித்தலும சமா தான நடவடிக்கைகளுக்கு சாதகமான முன் னெடுப்பாகவே அமையும் என்றுஅதில் தெரி விக்கப்பட்டுள்ளது. (எ-1)

## வவுனியாத்...

தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் தரப் பிலிருந்து தகவல்கள் எதுவும் வெளியாக வில்லை. இதனிடையில் யாழ். குடாநாட்டின் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் பகுதிகளை நோக்கி இராணுவத் தினர் கடுமையான எறிகணைத் தாக்குதல்க ளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-3,5)

## லண்டன்...

வடக்கு லண்டன் பகுதியில் அமைந்துள்ள கிராம்பேக் தொடர் மாடி வீடொன்றில் இருந்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

அங்கிருந்து விடுதலைப்புலிகளின் சுவ ரொட்டிகள், தமிழீழ காவல்துறையினருக் கான சீருடைகள் மற்றும் சில ஆவணங்க ளையும் கைப்பற்றியதாக அவ் இணையத் தளத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(எ-3)

## முன்னாள் அமைச்சர் மங்களவுடன்...

உறுப்பினர்கள் இருவர் மங்கள சமரவீரவின் அமைப்பில் சேர்ந்து கொள்ள விரும்பம் தெரிவித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

தற்போது நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் 39 பேர் உள்ளனர். ஜே.வி.பி.உறுப்பினர்கள் 37 பேர் உள்ளனர். தற்போது ஆளும் கட்சியி லிருந்து வரவுள்ள இரு உறுப்பினர்களுடன் இதன் எண்ணிக்கை 39 ஆகும்.

இவர்களுடன் மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராட்சி ஆகியோர் இணையும்போது எதிர்க்கட்சி வரிசையில் இவர்களது எண்ணிக் கை 41 ஆக அமையும். இதற்கமைய மங் கள சமரவீர எதிர்க்கட்சித் தலைவராக நிய மிக்கப்படும் சாத்தியக் கூறுகள் காணப்படு வதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

இதேவேளை முன்னாள் அமைச்சர் மங் கள சமரவீர தான் விரைவில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக் கவுள்ளதாகக் கூறியிருந்தார். ரணில் விக்கி ரமசிங்கவும் குருநாகல் கூட்டத்தில் உரை யாற்றும்போது மங்கள சமரவீரவை தான் சந்திக்கத் தயாராகவிருப்பதாகக் கூறியிருந் தார்.

அதன்படி விரைவில் ரணிலுக்கும் மங் களவுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெறக் கூடும் என்றும்இந்தச் சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவராக மங்களவை நியமிக்க ரணில் இணங்கும் பட்சத்தில் மங்கள தலைமையி லான குழுவினர் ஐ.தே.கவுடன் இணைய லாம் என்றும் அந்த வட்டாரங்கள் தெரி வித்தன.

ரணில் இதற்கு மறுப்புத் தெரிவிக்கும் பட் சத்தில் ஜே.வி.பியினருடன் சேர்ந்து புதிய தொரு எதிர்க்கட்சி அமைக்க மங்கள திட்ட மிட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் சிலரும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்க முன்வந்திருப்பதாகவும் தெரியவருகின்றது. (எ-5)

## சோதனையின் போது...

பம்பலப்பிட்டிய, வெலிக் கடை, கண்டி மற்றும் காலி ஆகிய பிரதேசங்களில் இச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் அடை யாளத்தை உறுதிப்படுத்தத் தவறிய இரண்டு தமிழர்களும் அடங்குகின்றனர்.

அத்துடன் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 17 பேரும் போதைப் பொருள் மற்றும் சட்ட விரோத மதுபானத்தைத் தம்முடன் வைத் திருந்த 9 பேரும் கைது செய்யப்பட்டதுடன் 3 பேர் சட்ட விரோத மணல் அகழ்வு தொடர் பாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை தல்லம்பிட்டியப் பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நட வடிக்கையின்போது அடையாளத்தை உறு திப்படுத்த முடியாத 14 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டியில் நடைபெற்ற சோதனை நட வடிக்கையின் போது மேலும் 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-3)

## ஜனாதிபதி பயணித்த...

பின்னரான விமானத்தில் அனுப்பி வைக்கப் பட்டேன்.ஆனால் விமானி உள்ளிட்ட பல தமி ழர்கள் என்னைச் சந்தித்துத் தங்களை மகிந்தவின் விமானத்தில் பயணிக்க சிறி லங்கா ஏயர்லைன்ஸ் நிறுவனம் மறுத்துவிட் டதாகக் கூறினர்.

மகிந்தவின் விமானத்தில் 25ற்கும் மேற் பட்ட இருக்கைகள் காலியாகத்தான் இருந் தன. ஆனால் நிர்வாகமோ அவை முன்பதிவு செய்யப்பட்டதாகக் கூறியுள்ளது.

தாயின் இறுதிச் சடங்கில் கலந்து கொள் வதற்காக அந்த விமானத்தில் பயணம் செய்ய இளைஞர் ஒருவர் முன்பதிவு செய்திருந்தார் என்றார் மகேஸ்வரன். ஆனால் இக் குற்றச் சாட்டை சிறிலங்கா ஏயர்லைன்ஸ் நிறுவனம் மறுத்துள்ளது. (எ-5)

## கொலையாளிகளைக் கண்டு...

இலங்கையில் 2006 ஆம் ஆண்டில் அதிர்ச்சியளிக்கக் கூடிய வகையில் அக்ஷன் பாம் நிறுவனத்தின் 17 பணியாளர்கள் உள் ளிட்ட 24 மனிதாபிமானப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இப் படு கொலைகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் ஏற்கனவே வலி யுறுத்தியுள்ளார்.

லெபனானில் உள்ள பாலஸ்தீன அகதி கள் முகாம்களில் பணியாற்றிய இரண்டு செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்கள், சூடா னில் தர்ஹபூரில் காரிதாஸ் நிறுவனப் பணி யாளர் படுகொலை என இத்தகைய மனிதா பிமானப் பணியாளர்கள் எதனிலும் குற்ற வாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆயுதப் போராட்டங்களில் பொதுமக்க ளின் பாதுகாப்புக் குறித்துப் பகிரங்கமாக விவாதிக்கப்பட வேண்டும். இலங்கையின் யாழ்ப்பாணத்தில் 6 இலட்சம் மக்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் அரசாங்கத்தாலும் தமிழீழ விடுதலைப்புலிகளாலும் கடல் மற் றும் தரை வழிப் பாதைகள் தடுக்கப்பட்டமை யால் அடிப்படைத் தேவைகளுக்கான பொருள்களின் பற்றாக்குறைக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மனிதாபிமானப் பணியாளர்களைப் படு கொலை செய்வதும் பொது மக்களுக்கான விநி யோ கத்தை மறுப்பதும் அனை த்துலக மனிதாபிமானச் சட்டங்களை மீறுவதா கும் என்றார் அவர். (எ-5)

## தமிழ்நாட்டைக் கண் ...

இது தொடர்பாக கொழும்பு சிங் கள ஊடகமான 'லக்பிம' செய்தி வெளியிட்டுள்ளது. சீனாவின் எலக் ரோனிக் ரெக்னோலொஜி நிறுவ னத்தினால் வடிவமைக்கப்பட்ட ஜே. வை -11 ரக தாழ்வாகப் பறக்கும் வானூர்திகளைக் கண்டறியும் முப் பரிமாண ராடர்களை அரசு கொள் வனவு செய்துள்ளது.

இந்த ராடர்களைக் கொள்வ னவு செய்வதற்கு அரசு கடந்த ஆண்டு கொள்வனவுப் பத்திரத் தைச் சமர்ப்பித்ததுடன் முற்பணத் தையும் செலுத்தியிருந்தது. எனி னும் இலங்கையில் சீனாவின் தலையீடுகள் தொடர்பாக இந்தியா கவலை தெரிவித்ததனால் அது கைவிடப்பட்டிருந்தது.

ஜே.வை-11 ரக ராடர் தொகுதி எஸ்- அலைவரிசை கொண்டது. இது தாழ்வாகப் பறக்கும் விமானங் களைக் கண்டறியக்கூடியதுடன் அது தொடர்பான தகவல்களை வான் பாதுகாப்புத் தொகுதிக்கும் வழங்கக் கூடியது.இதனை வ்வுனி யாவில் பொருத்தினால் அது தமிழ் நாட்டிலுள்ள விமானங்களின் நட மாட்டத்தையும் கண்டறியக் கூடியது.

ஜே.வை-11 ராடர்கள் மூன்று நகர்த்தக் கூடிய பகுதிகளைக் கொண்டது. எனவே விரைவாகப் பொருத்தக் கூடியதும் பிரிக்கக் கூடியதுமாகும். 5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்த ராடர் தொகுதி 160 கி.மீ. தூர வீச்சுக் கொண்டது.

இந்த ராடர்கள் விரைவில் இல ங்கை வந்தடையவுள்ளன. அதனை நிறுவுவதற்கான ஆயத்த வேலை களை இலங்கை விமானப் படை யினர் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த மே மாதம் அமெரிக்காவின் நிபுணர்கள் இலங்கை வந்தபோது வான்படையினர் தமது எம்.ஐ-24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திக ளில் வானிலிருந்து வானுக்கு ஏவப் படும் ஏவுகணைகளைப்பொருத்து வது தொடர்பாக ஆலோசனைக ளை நடத்தியிருந்தனர்.

அமெரிக்கத் தயாரிப்பான வானிலிருந்து வானுக்கு ஏவப்ப டும் ஸ்ரிஞ்சர் ஏவுகணைத் தொகு தியையே எம்.ஐ-24 உலங்கு வானூர்திகளில் பொருத்துவதற்கு மிகவும் செயற்திறன் மிக்கதென பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

மேலும் கட்டுநாயக்க வான் படைத் தளத்தில் விடுதலைப்புலி களின் வான்தாக்குதல் நடைபெற்ற மூன்று மாதத்தின் பின்னர் வான் பாதுகாப்பு பொறிமுறை இயங்க ஆரம்பித்துள்ளது.

ராடர்களுடன் இணைக்கப்பட்ட விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் முக்கியமான பகுதிகளில் நிறுவப் பட்டுள்ளன. முக்கியமான படை நிலைகளினதும் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-5)


**விசேட வகுப்புக்கள்**

கணக்கீடு

A/L 2008, 2009

*மாணவர்களிற்கான விசேட வகுப்புக்கள்.*

*[உங்கள் இடங்களில் group classess அமைக்கப்படும்]*

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

T.S.Bala

0779184121 (C-172)



## வட்டிக்காக நிறுத்தி வைக்கும் வரி சம்பந்தமாக சகல வங்கி வைப்பாளர்களுக்கும் விடுக்கும்

## முக்கிய அறிவித்தல்

2007 ஏப்பிரல் 1 ம் திகதி முதல் செயற்படும் விதத்தில் வட்டிக்காக நிறுத்தி வைக்கும் வரி சம்பந்தமாக புதிய நிபந்தனைகள் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் சகல வங்கி மற் றும் மற்றைய முதலீட்டு நிறுவனங்களுக்கு தேசிய வருமான வரித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

***அந்த நிபந்தனைகள் பின்வருமாறு:***

1. செலுத்தும் வட்டிக்காக தற்போது நிறுத்தி வைக்கும் வரியின் வீதம் 10%

2. குறிப்பிட்ட மதிப்பாண்டிற்காக மதிப்பீடு செய்ய வேண்டிய வருமானமானது (விடுபடும் வருமானத்தை தவிர்ந்த வட்டி உட்பட்ட முழு வருமானமும் உள்ளடக்கப்படும்) ரூபா 300,000 அதிகமாகாது என தனி ஒரு நபரினால் அல்லது புண்ணிய நிறுவனம் ஒன்றினால் எழுத்து மூலமாக வங்கிக்கு அறிவிக்கப்பட வேண்டும். அதற்கேற்ப அந்த மதிப்பாண்டிற்கான வட் டிக்காக வரிக்குறைப்பு ஒன்று மேற்கொள்ளப்படாது.

மதிப்பீடு செய்ய வேண்டிய வருமானமானது ரூபா 300,000 அதிகமாக இருக்க வேண் டும் எனினும், ரூபா 600,000 அதிகமாகாத சந்தர்ப்பத்தில் அந்த மதிப்பீட்டு வருடத்திற் கான வரிக்காக 2.5% வரிக் குறைப்பொன்றே மேற்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிட்ட 2 இல் குறிப்பிட்டுள்ளவாறு வரியிலிருந்து விலக்குப் பெறுவதற்காக வைப்பாளர்கள் எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டியது கட்டாயமானதுடன், அவ்வா றான எந்தவொரு வரி அறவீட்டிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொள்வதற்கு அதற்குத் தகுதி பெற்ற வைப்பாளர்கள் தமது வங்கிக் கிளை முகாமையாளருடன் கலந்தாலோசித்து விட்டு கிளைக்கு ஒப்படைக்க வேண்டிய பிரகடனப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வது அவ சியமாகும். தேசிய வரி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் அதிகாரிகள் கேட்கும் பட்சத்தில் அவ்வாறான பிரகடனப் பத்திரம் அவர்களின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

3. தனிஒரு நபரினால் அல்லது புண்ணிய நிறுவனம் ஒன்றினால் நடாத்திச் செல்லப் படும் சேமிப்புக் கணக்கின் வட்டி மாதத்திற்கு ரூபா. 5,000 க்கு குறைவெனின் நிறுத்தி வைக்கும் வரியிலிருந்து அது விடுபடும். ஒரே பெயரின் கீழ் பல்வேறுபட்ட சேமிப்புக் கணக் குகள் காணப்படின் இதற்கான விளக்கம் அளிக்கப்பட வேண்டும். மற்றைய சகல சேமிப் புக் கணக்குகளுக்கான வட்டி நிறுத்தி வைக்கும் வரிக்கு உட்படும்.

4. வங்கிகளுக்கு வழங்கியுள்ள அறிவுறுத்தலின்படி நபர்களின் கூட்டு வைப்புக்களுக்கு வழங்கப்படும் வட்டி அந்நபர்களுக்கிடையில் சமமாகப் பகிரப்படக் கூடியதாகும். ஒவ் வொரு நபருக்கும் ஒதுக்கப்படும் வட்டி வீதம் அந்நபருக்காக செலுத்தப்படும் வட்டியாகக் கருத்தில் கொள்ளப்படும்.

***மேலதிக விபரங்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களுக்கு வைப்பாளர்கள் தமது கிளை முகாமையாளரை அணுக முடியும்.***

❖ இலங்கை வங்கி ❖ மக்கள் வங்கி ❖ கொமர்ஷல் வங்கி ❖ தேசிய சேமிப்பு வங்கி ❖ ஹற்றன் நஷனல் வங்கி ❖ செலான் வங்கி.

(C-193)


த்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.